பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நாம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.எல்.

மலர்: 16] சென்னை: கார்த்திகை 22 (7—12—68) சனி ★ வெளியீடு: கார்த்திகை 23 (8—12—68) ஞாயிறு [இதழ்: 144

சிகிச்சைச் செலவை அரசு தருவதை ஒப்பவில்லை அண்ணா

'மக்களின் வரிப் பணத்தை எனக்காக செலவிடக்கூடாது' எனக் கண்டிப்பு

காந்தியார் அடிச்சுவட்டில் செல்வதை மெய்ப்பித்துவிட்டார்

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

செங்கற்பட்டு, டிச. 7—

"அறிஞர் அண்ணா அவர்கள், சிகிச்சைக்காகத் தனக்கான செலவை, அரசுப் பணத்திலிருந்து கொடுப்பதை ஒப்பவில்லை; அரசின் பணம்தான் என்றாலும், மக்களிடமிருந்து வரியாகப் பெறப்படும் பணத்தைத் தனக்காகச் செலவிடுவதை அவர் ஏற்கவில்லை; 'எனக்காக அரசுப் பணத்தைச் செலவிடலாகாது' எனக் கண்டிப்பாகக் கூறிவிட்டார்!

"'ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர்' என்ற முறையில், அவருக்கான அனைத்துச் செலவையும் அரசு ஏற்கலாம் என்பதுதான் முறை என்றாலும்கூட--அண்ணாவின் சொற்களை ஏற்று அவருக்கு நிம்மதியைத்தர கழகமே நிதி திரட்டுகிறது; இதற்கு எல்லாக் கழகத் தோழர்களும் முனைந்து நிதி திரட்டித் தருவர் என்று நம்புகிறேன்.

"அரசு இன்று வாழ்கிறது என்றால், அது அண்ணாவின் அறிவால்--ஆற்றலால்தான்! அன்று காந்தி என்ன சொன்னாரோ அதையே இன்று இவரும் சொல்லுகிறார்!

"அன்று காந்தியார் வறுமையால் வாடும் மக்களைப் பார்த்துவிட்டு,'இவர்களுக்கு உடுக்கச் சரியான உடை இல்லாதபோது எனக்கு ஏன் இந்தச் சட்டை--எனக்கு ஏன் இந்தத் தலைப்பாகை' என்றார்; இன்று அதைப் போல அண்ணாவும், 'என்னுடைய சிகிச்சைச் செலவுக்கு அரசாங்கப் பணம் ஏன்--அது கூடாது' என்கிறார்!

"அண்ணல் காந்தியாரின் அடிச்சுவட்டில், அறிஞர் அண்ணா அவர்களும் செல்கிறார் என்பதை, அண்மைக் கால நிகழச்சிகள்மூலம் அவர் மெய்ப்பித்துவிட்டார்!"

இவ்வாறு, கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், செங்கற்பட்டு மாவட்டம் நந்திவரம் பகுதியில் நடைபெற்ற காந்தியார் நினைவு மண்டபக் கால்கோள் விழாவில் உரையாற்றுகையில் தெரிவுபடக் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"அண்ணா அவர்கள் அறுவைச் சிகிச்சைக்காக அமெரிக்க நாட்டிற்குப் பயணமானபோது அவருக்கும், அவருடன் செல்லும் டாக்டர் சதாசிவம் அவர்களுக்கும் ஆகும் செலவை -- சட்டப்படி 'முதலமைச்சர்' என்ற முறையில் அவருக்கு ஆகும் செலவை -- அரசு ஏற்கலாம் -- ஏற்பது முறை என்பதை ஏற்றுக்கொண்டு, அவருடன் சென்ற மற்றைய நான்கு பேருக்கும் (அண்ணியார், செல்வன் பரிமளம், இராசாராமா, செழியன்) ஆகும் செலவை கழகம் ஏற்பது என்று நானும், பொருளாளர் கருணாநிதியும் சேர்ந்து முடிவு செய்தோம்; இந்த ஏற்பாடு அண்ணா அவர்களுக்குத் தெரியாது.

அண்ணா சிகிச்சை பெற்றுத் தாயகம் திரும்பியபோது அண்ணாவுக்கான செலவு பற்றிப் பலர் குறை கூறினார்கள்.

அண்ணா அவர்கள் தனக்கு ஆன செலவை அரசாங்கப் பணத்திலிருந்து கொடுப்பதை ஒப்பவில்லை; 'அரசு பணம்' என்றாலும், மக்களிடமிருந்து வரியாகப் பெறப்படும் பணத்தைத் தனக்காகச் செலவிடுவதை அவர் ஏற்கவில்லை; 'எனக்காக அரசுப் பணத்தைச் செலவிடலாகாது' எனக் கூறிவிட்டார்.

அதையொட்டி, பொருளாளர் கருணாநிதி அவர்கள், நிதி தருமாறு கழகத் தோழர்களுக்கு அறிக்கை விட்டுள்ளார்.

அண்ணா சிகிச்சை நிதிக்கு நான் எனது பங்காக என் ஒரு மாத ஊதியம் ரூ. 500-ஐ தந்துள்ளேன்; அதேபோல மற்றவர்களும்—கழகச் சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்களும், நகர -- மாவட்ட -- தாலுகா -- கிராமக் கழகத் தோழர்களும் முன்வந்து நிதி திரட்டி விரைவில் அரசுக்கு அப்பணத்தை -- அண்ணாவுக்கான செலவை -- திருப்பி அரசுக்குச் சல்லிக் காசு பாக்கியில்லாமல் செலுத்திவிடுவோம்!

காந்தியார் கொள்கையில் தீவிரம் காட்டுகிறார்!

காந்தியார் கடைபிடித்த முக்கிய கொள்கையான மதுவிலக்கில்

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழக அரசின் கோரிக்கையை ஏற்கவில்லை!

புதுடில்லி, டிச. 7—

"வேலூர் -- கோட்டை ஜலகண்டேசுவரர் கோவிலையும், தஞ்சை பிரகதீசுவரர் கோவிலையும் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதற்கில்லை; இவை, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களாகும்"

என்று மக்களவையில், துணைக் கல்வியமைச்சர் ஷேர் சிங் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

மாநிலத்தில், மத்திய அரசின் மேற்பார்வையில் உள்ள இத்தகைய 59 நினைவுச் சின்னங்களை மாற்றுவது சம்பந்தமாக அரசின் பரிசீலனையில் இருந்துவருவதாகவும் அவர் கூறினார்.

ஜி. பார்த்தசாரதிக்குப் புதிய பதவி

ஐ. நா. பாதுகாப்பு அவையில் இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக இருக்கும் திரு. ஜி. பார்த்தசாரதி, வெளிவிவகார அமைச்சுத்துறையில் கொள்கை வகுப்புக் குழுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதுவரை கொள்கை வகுப்புக் குழுக் கூட்டத்திற்கு வெளியுறவுத் துறைச் செயலாளர் தலைமை தாங்கி வந்திருந்தார்.

திரு. பார்த்தசாரதி பதவியேற்றதும், இந்தக் குழுக் கூட்டத்திற்கு அவர்தான் தலைமைவகிப்பார்.

இந்தக் குழு, வெளிவிவகாரத் துறை, பாதுகாப்புத் துறை, உள்துறை, மற்றும் வணிகத் துறை ஆகியவைகளின் செயலாளர்கள் உள்ளடக்கியதாகும்.

திரு. பார்த்தசாரதி அடுத்த ஆண்டு சனவரியில் இந்தியாவிற்குத் திரும்பி வருவார் என்று தெரியவருகிறது.

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி -- கருத்திருமன் கூற்று --

கழகப் பொருளாளர் மு. கருணாநிதி கண்டனம்

'தீயநோக்கம் கற்பித்து அறிக்கை விடுவது வியப்புமிக்கது'

'அரசியல்பண்பாட்டைக்காங்கிரசார் பாழ்படுத்துவதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு'

அறிஞர் அண்ணா அவர்களின் சிகிச்சை நிதி பற்றி, சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி. கருத்திருமன் அவர்கள், பேட்டி ஒன்றில் கூறியிருப்பதைக் கண்டித்துக் கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் வெளிநாட்டிலுள்ள அறிக்கை வருமாறு:—

"'அண்ணா சிகிச்சை நிதி' திரட்டுவது ஒரு அரசியல் மோசடி என்றும், வேறு ஒரு நோக்கத்துக்காக இந்த நிதி திரட்டப்படுகிறது என்றும், அண்ணாவும் அவர் துணைவியாரும், மருத்துவருக்கு மட்டும் சென்றிருந்தால் அத்தகான முழுத் தொகையையும் தமிழக அரசு ஏற்கவேண்டுமென நானே வற்புறுத்தியிருப்பேன் என்றும், ஆனால் அவர் நண்பர்களும் புதுவர்களும் செலவதற்கெல்லாம் சேர்த்து நிதி திரட்டுவது கண்டிக்கத்தக்கதென்றும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் வெளியிட்டுள்ள அறிக்கை, அவரது குறுகிய உள்ளத்தைப் பிரதிபலிப்பதாகும்; விபரம் தெரியாமல் விடப்பட்ட அறிக்கையாகும்.

"திருமதி அண்ணியார் அவர்களுக்கும் செல்வன் பரிமளம், நண்பர்கள் இரா. செழியன், க. இராசாராமா ஆகியோருக்கும் ஆகியுள்ள செலவினங்களுக்கான தொகை முழுவதையும் ஏற்கனவே -- அதாவது செப்டம்பர் மாதத்திலேயே-- தி. மு. க. தலைமைக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதனை எனது வேண்டுகோள் அறிக்கையிலேயே நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

"இப்போது திரட்டப்படுகின்ற 'சிகிச்சை நிதி' அண்ணா அவர்களும், டாக்டர் சதாசிவம் அவர்களும் அமெரிக்கா சென்றுவந்த செலவு--சிகிச்சைச் செலவு ஆகியவற்றுக்காக மட்டுந்தான்!

"எதிர்க் கட்சியான காங்கிரசாரின் பரந்த மனப்பான்மையைப் பற்றியும் பண்பைப் பற்றியும் முன்னமேயே அறிந்திருக்கிற காரணத்தாலேயே தான், அண்ணா -- டாக்டர் இருவருக்குமான செலவைச் சர்க்கார் ஏற்றுக்கொள்வதற்கு முன்மாதிரிகள் இருந்தும்கூட, அதனை விரித்துக் கழகச் சார்பில் அந்தத் தொகையைக் கட்டிவிட முடிவு செய்து அதற்காக நிதி திரட்டப்படுகிறது.

அரசு அலுவலர்ர் குடும்பத்தினர் சிலர்கூட வெளிநாடு சென்று சிகிச்சை பெற்றதற்காக ஆன செலவை முந்திய சர்க்கார் ஏற்றிருக்கிறது.

"இவைகளையெல்லாம் எண்ணிப் பார்க்காமல் அல்லது தெரிந்துகொள்ளாமல், அவசரத்தில் கருத்திருமன் அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்.

"'சர்க்கார் செலவில் முதலமைச்சரும், டாக்டரும் சென்று வரலாம்' என்று நில்லை இருக்கும்போதாவது, அந்தச் செலவை கட்சியே ஏற்றுக்கொள்ள நிதி திரட்டுவதற்குக் கருத்திருமன் நோக்கம் கற்பிப்பது அரசியல் நாகரீகமும் ஆகாது--மனிதாபிமானமிக்க செயலுமாகாது!

"1967 சனவரியில் -- பொதுத் தேர்தலில் -- காங்கிரசும் பிரச்சாரத்திற்காகக் காங்கிரசுக் கட்சியின் சார்பில் தமிழகம் வந்தபோது, இந்திரா காந்தி பேசிய கூட்டங்களுக்கான மேடை முதலிய செலவுகளுக்காகத் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சி, சர்க்கார் பணத்திலிருந்து செலவழித்த வகையில் சர்க்காருக்குத் திருப்பிக் கட்ட வேண்டிய ரு. 76 ஆயிரத்தை இரண்டாண்டுக்கு மேலாகியும் இன்னும் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சி கட்டவில்லை!

"இப்படிப்பட்ட நாணயஸ்தர்கள், 'அண்ணா சிகிச்சை நிதி' பற்றித் தீய நோக்கம் கற்பித்து அறிக்கை விடுவது எனக்கு வியப்பாயிருக்கிறது. தமிழ்நாட்டு அரசியல் பண்பாட்டைக் காங்கிசார் எந்த அளவு பாழ்படுத்துகிறார்கள் என்பதற்கு இது மற்றுமோர் எடுத்துக்காட்டாகும்!"

மூன்றுண்டில் சென்னைக்குக் காவிரி நீர்

கூவம் ஆற்றைச் சீரமைக்கும் திட்டம் இரண்டாண்டில் முடியும்

சென்னை, டிச. 7—

சென்னை நகருக்குக் காவிரி நீரைக் கொண்டுவருவதற்கான திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரூ. 21.34 கோடி அரசு அனுமதித்திருக்கிறது. இத்திட்டத்தின் மூலம் சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 4 கோடி காலன் தண்ணீர் வழங்கத் திட்டமிடப்படுகிறது.

இத்திட்டத்துக்கு திட்டக் குழு ஏற்கனவே தனது ஒப்புதலை அளித்திருக்கிறது.

கூவம் மேம்பாட்டுத் திட்டத்தை அடுத்த இரு ஆண்டுகளில் நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளும் இறுதியாக்கப்பட்டன. இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ. 118.5 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது.

வீராணம் திட்டத்தை மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள் கோட்டையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இறுதியாக்கப்பட்டன.

பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. கருணாநிதி, பொதுச் சுகாதார அமைச்சர் திரு. சாதிக் பாட்சா, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. முத்துசாமி, மேயர், துணை மேயர், மற்றும் அதிகாரிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

வீராணம் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய கட்டங்கள், முறை ஆகியவை இன்றைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன.

வீராணத்திலேயே தண்ணீரை வடிகட்டுவது என்று முடிவு செய்யப்பட்டது.

வடிகட்டும் சாதனங்களை அமைக்கும் இடமும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த வேலை 1969 பிப்ரவரியில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வீராணத்திலிருந்து சென்னைவரை 135 மைல் தொலைவுக்குக் குழாய் அமைக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன.

வீராணம் அருகே 15 மைல் நீளத்திற்குக் குழாய்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கின்றன.

குழாய்களைத் தயாரிக்கும் பிரச்சினையும், பம்புகளுக்கு ஆர்டர் கொடுக்கும் பிரச்சினையும் தொழில் நுட்பப் பரிசீலனையில் உள்ளன.

சென்னை நகர எல்லை வரம்புக்குள் காவிரி நீரை வழங்குவது பற்றியும், தற்போதுள்ள மாநகராட்சி நீர் வழங்கு ஏற்பாட்டுடன் இந்தக் குழாயை இணைக்கும் விதம் பற்றியும் விவரங்கள் தயாரிக்கப்பட்டன.

வீராணத்திலிருந்து காவிரி நீரை மாநகராட்சி நீர் வழங்கு ஏற்பாட்டுடன் இரு இடங்களில் இணைப்பது என முடிவு செய்யப்பட்டது.

தென் சென்னையில் இதற்காக நிறுவப்பட்டுள்ள தென் சென்னை நீர் வழங்கு நிலையம் முதலாவது இடமாகும். இதில் நாளொன்றுக்கு சுமார் 3 கோடி காலன் தண்ணீர் வழங்கப்படும். மீதமுள்ள ஒரு கோடி காலன் தண்ணீர் வடசென்னை நிலையத்துக்கு நேரடியாக விடப்படும். புழலேரியிலிருந்து ஏற்கனவே கிடைத்துவரும் தண்ணீருடன் இக்கூடுதல் நீரும் வழங்கப்படும். அதாவது நாள்தோறும் 4 கோடி காலன் தண்ணீர் கூடுதலாக வழங்கப்படும்.

கூவம் மேம்பாட்டுத் திட்டம், இருகரைகளையும் சிமெண்டு பிளாக்குகளாக் கொண்டு உட்பக்கமாக வலுப்படுத்த வகை செய்கிறது.

கேப்பேயர் பாலம் அருகே கூவம் ஆற்றின் இடது கரையை வலுப்படுத்தும் வேலை பெரும்பாலும் முடிந்துவிட்டது; வலது கரையை வலுப்படுத்தும் வேலை தற்போது நடைபெறுகிறது.

மண்வாரி இயந்திரம் வாங்குவதற்காக நடவடிக்கை எடுக்குமாறு தலைமைப் பொறியர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

ஆற்றின் இரு மருங்கிலும் சுமார் 12 ஏக்கர் நிலம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது;: அது கடைகள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும்.

இரு கரைகளையும் அழகுபடுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பல பூங்காக்கள் நிறுவப்படும்; இயலுமானால் உல்லாசப் படகு விடுவது போன்றவைகளுக்கு வகை செய்யப்படும்.

மாநகராட்சியின் கழிவுநீர் குழாயிலிருந்தும், மத்திய சிறை, பொது மருத்துவமனை போன்றவைகளிலிருந்தும் வெளிவரும் சாக்கடை நீர் கூவம் ஆற்றில் விழாதவாறு தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்; மருத்துவமனையிலிருந்து வரும் கழிவு நீர் முக்கியக் குழாயில் திருப்பு வகை செய்யப்படும்.

கூவம் ஆற்றின் துர்நாற்றத்தைப் போக்கிச் சுத்தம் செய்யும் திட்டத்தை இரு ஆண்டுகளில் முடித்துவிட மாநகராட்சி ஒப்புக் கொண்டிருக்கிறது.

கூவம் ஆற்றின் கரையில் குடியேறியுள்ள குடிசைவாழ் மக்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள்; வீடுகளுக்காக ரூ. 35 இலட்சம் செலவில் குடியிருப்பு வசதித் திட்டமொன்றை மேற்கொள்ளுமாறு மாநில வீட்டு வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கைதிகளைத் திருத்தும் சிறை!

ஜெர்மனியின் முற்போக்கான சிறைகளில் ஹனோவர் நகரச் சிறையும் ஒன்று!

சிறையிலிருந்து வெளியேறும் கைதிகள் சமூகாயத்தில் நல்லவிதமாக நடந்து கொள்வதற்கு வசதியாகச் சிறைக்குள் கைதிகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களைச் சொல்லித் தருகிறார்கள்.

சாப்பிடும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும்—ஒவ்வு நேரத்தில் எப்படி பொழுதுபோக்கலாம்—அறையை அங்கரிப்பது எப்படி—என்று சிறைக் கைதிகளுக்கு சொல்லித் தருகிறார்கள்.

அடிப்படை உரிமையைப் பறிக்கும் மசோதா

அரசியல் சட்டத்துக்கு முரணாக டில்லியின் நடவடிக்கை

கண்டித்து நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியினர் வெளிநடப்பு

புதுடில்லி, டிச. 5—

மத்திய அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதைச் சட்ட விரோதமாக்கும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவைக் கடுமையாக எதிர்த்து நாடாளுமன்ற மக்களவையில் எதிர்க் கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்.

ஜன சங்கம், சுதந்தரா, மற்றும் சில சுயேச்சை உறுப்பினர்கள் தவிர மற்ற எல்லா எதிர்க் கட்சியினரும் வெளிநடப்பில் கலந்து கொண்டனர்.

உள்துறை அமைச்சர் திரு. சவான் இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்கு அவையின் ஆதரவைக் கோரினார்; இதற்கு ஆதரவாக 93 வாக்குகளும், எதிராக 36 வாக்குகளும் கிடைத்தன.

மசோதா முன்மொழியப்பட்ட அந்த நேரத்திற்கான, 'வெட்கம்—வெட்கம்' என்று முழங்கிய வாறு எதிர்க் கட்சியினர் வெளியேறினர்.

கடந்த செப். 19-ஆம் நாள் மத்திய அரசு ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தை பொட்டிக் குடியரசுத் தலைவர் பிறப்பித்த அவசரச் சட்டத்துக்குப் பதிலாக இந்தப் புதிய சட்டம் கொண்டு வரப்படுகிறது.

இந்த மசோதா தொழிற் சங்க உரிமையைப் பறிப்பதாகவும், அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணது என்றும் எதிர்க் கட்சியினர் வாதிட்டனர்.

வி. கிருஷ்ணமூர்த்தி

தி.மு.க. உறுப்பினர் வி. கிருஷ்ணமூர்த்தி, வேலைநிறுத்தம் செய்வதற்கு, அரசியல் சட்டம் 14, 19-1 ஆகிய பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை இந்த மசோதா பறிப்பதாகக் குற்றஞ்சாட்டினார்.

கோல்கநாத் வழக்கில் தலைமை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, 'அடிப்படை உரிமையை அரசு பறிக்க முடியாது' என்றார்.

ஆலை முதலாளிகளைக் கண்டு டில்லி அச்சம்!

காங்கிரசு உறுப்பினர்களே அம்பலப்படுத்தினர்

சர்க்கரை விலை குறைய கழக உறுப்பினர் வெ. கிருட்டினமூர்த்தி யோசனை

புதுடில்லி, டிச. 6—

மக்களவையில், இந்திய அரசின் சர்க்கரைக் கொள்கையை, காங்கிரசு -- சுதந்தரா -- ஜனசங்க -- தி. மு. க. உறுப்பினர்கள் பலமாகக் கண்டித்தனர்.

விவசாயிகள் நலனை அரசு முற்றிலும் புறக்கணித்துவிட்டதாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது; இந்த ஆண்டு பிறப்பிக்கப்பட்ட சர்க்கரைக் கட்டுப்பாடு உத்தரவின்கீழ் மிக்க குறைந்த விலையில் ஆலைச் சொந்தக்காரர்களுக்கு விவசாயிகள் கரும்பை விற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகக் கூறினர்.

காசிநாத் பாண்டே, என். பி. சி. நாயுடு ஆகியோர் விவாதத்தை எழுப்பினர்.

"உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு நியாயமான இலாபம் கிடைக்க அரசு உறுதி செய்யத் தவறினால் கடும் விளைவுகள் ஏற்படும்" என என். ஜி. ரங்கா எச்சரித்தார்.

"விவசாயிகளை நசுக்கமுடியும் என நீங்கள் நினைத்தால், அரசையும் நாங்கள் நசுக்கமுடியும்" என்றார் என். பி. சி. நாயுடு.

"விவசாயிகளின் நலன் காக்கப் படாவிடில் அடுத்த ஆண்டு விவசாயிகள் கருப்புச் சாகுபடி செய்யமாட்டார்கள்; அரசு சர்க்கரை இறக்குமதி செய்யவேண்டியிருக்கும்" என்றும் அந்தக் காங்கிரசு உறுப்பினர் எச்சரித்தார்.

துணிவு கொள்ளுமாறும், சர்க்கரை ஆலைச் சொந்தக்காரர்களைக் கண்டு பயப்படவேண்டாம் என்றும், அமைச்சரவைமுன்பு விவசாயிகள் விஷயத்தை வைக்குமாறும் விவசாய அமைச்சர் செக ஜீவன்ராமை, பல காங்கிரசு உறுப்பினர்கள் வற்புறுத்தினர்.

கழக உறுப்பினர் யோசனை

"சர்க்கரை விநியோகத்தை மத்திய அரசு கட்டுப்படுத்தவேண்டும்; உற்பத்தி விஷயத்தையும், கரும்பு விலை நிர்ணயத்தையும் மாநில அரசுகளிடம் விடவேண்டும்"

எலிசபெத் கப்பலின் இறுதிப் பயணம்

இலண்டன், டிச. 7—

கடந்த 22 ஆண்டுகளாக, தான் தொட்டுத்தொட்டு நின்ற துறைமுகத்தைக் கடைசியாகப் பார்த்து விடை பெற்றுக் கொண்டு—தவழ்ந்து செல்லுவந்த கடல் நீரோடு தன் 'கண்ணீரை'யும் கலந்து—தனது கடைசிக் கடற்பயணத்தைத் தொடங்கியிருக்கிறது 'எலிசபெத்-1' என்ற பிரிட்டிஷ் கப்பல்.

சென்ற வாரக் கடைசியில் பிரிட்டனிலிருந்து புறப்பட்ட இந்த 83,000 டன் எடைக் கப்பல், அமெரிக்கா சென்று அங்கு 'ஓய்வு' பெறும்.

1,031 அடி நீளமும் 118 அடி அகலமும் கொண்ட இந்தக் கப்பல், தனது வாழ்நாளில் இதுவரையில் 35 இலட்சம் மைல்கள் பயணம் செய்திருக்கிறது; இதில் பயணம் செய்துள்ள பலதரப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை 15 இலட்சம்.

'ஓய்வு' பெறும் முதலாம் எலிசபெத் கப்பலைத் தொடர்ந்து, அதன் இடத்தை நிரப்ப இரண்டாம் எலிசபெத் என்ற புதிய கப்பல் தயாராகி வருகிறது. இதன் சோதனை ஓட்டங்கள் இப்போது நடைபெற்று வருகின்றன. இந்த புதிய கப்பலின் நீளம் 963 அடி—அகலம் 105 அடி; ஆயினும், இதிலும் அதே எண்ணிக்கையில் 2,000 பயணிகள் பிரயாணம் செய்யலாம்.

கடன் பத்திரத்தில் கையெழுத்து!

ரூ. 36 கோடிக்கு ஒப்பந்தம்

புதுடில்லி, டிப். 6—

இந்தியாவுக்கு மொத்தம் ரூ. 36 கோடி (2-கோடி ஸ்டர்லிங்) கடன் வழங்குவதற்கான ஒப்பந்தங்கள் நேற்றுவெளியிடப்பட்டன. வெளிநாட்டு அமைச்சர் மைக்கேல் ஸ்டுவர்ட்டும் இந்தியத் துணைத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாயும் கையெழுத்திட்டனர்.

1968—69-ல் இந்தியாவுக்குப் பிரிட்டிஷ் உதவியின் ஒரு பகுதியாக இந்தக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

நடப்பு ஆண்டில் இந்தியாவுக்கு ரூ. 63 கோடி (3.5 கோடி ஸ்டர்லிங்) உதவியளிக்க பிரிட்டன் ஒப்புக் கொண்டிருந்தது; இப்போது செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்துடன் மொத்தம் ரூ. 63 கோடி உதவித் தொகை நிறைவு பெற்றுவிடுகிறது.

இது தவிர, ரோம் உணவு உதவி ஏற்பாட்டின்கீழ் 1,20,000 டன் கோதுமை வாங்குவதற்காக அண்மையில் அளிக்கப்பட்ட ரூ. 63 சம ஸ்டர்லிங் (ரூ. 4.88 கோடி) உணவு உதவி வழங்கப்பட்டுள்ளது.

எதற்காகச் சட்டமன்றம் கூட வேண்டும்?

காரணம் கூறுவாரா கருத்திருமன்?

அமைச்சர் நெடுஞ்செழியன் கேள்வி

மதுரை, டிச. 6—

"தமிழகச் சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் பி. ஜி. கருத்திருமன் கூறியிருக்கிறாரே—அதுபற்றி உங்கள் கருத்தென்ன?"

என்று இங்கு வந்திருந்த அமைச்சர் இராா. நெடுஞ்செழியன் அவர்களிடம் செய்தியாளர்கள் கேட்டனர்; அமைச்சர் அளித்த பதிலாவது:—

"சட்டமன்றம் என்பது சாதாரண காரியங்களுக்கெல்லாம் கூட்டப்படக் கூடியதல்ல; இப் பொழுது சட்டமன்றம் கூடிக் கவனிக்க வேண்டிய அலுவல்களும் இல்லை--- அவசரமும் இல்லை; முக்கிய மசோதாக்களும் கிடையாது; அப்படி ஒன்றுமே இல்லாமல் ஏன் சட்டமன்றத்தைக் கூட்ட வேண்டும்?

"சட்டமன்றத்தைக் கூட்டவேண்டும் என்று கூறும் கருத்திருமன் அத்தற்கான அவசியத்தை உண்டு பண்ணும் பணியினைச் செய்துள்ளாரா--முக்கியத் தீர்மானம் எதையாவது கொண்டு வந்துள்ளாரா என்றால், அதுவும் கிடையாது!

"வரும் சனவரித் திங்கள் முதல் அல்லது முன்றாவது வாரத்தில் சட்டமன்றக் கூட்டம் நடைபெறக் கூடும்; விரைவில் இது பற்றி அறிவிக்கப்படக்கூடும்."

பாட்டுடன் இரு இடங்களில் இணைப்பது என முடிவு செய்யப்பட்டது.

தென் சென்னையில் இதற்காக நிறுவப்பட்டுள்ள தென் சென்னை நீர் வழங்கு நிலையம் முதலாவது இடமாகும். இதில் நாளொன்றுக்கு சுமார் 3 கோடி காலன் தண்ணீர் வழங்கப்படும். மீதமுள்ள ஒரு கோடி காலன் தண்ணீர் வடசென்னை நிலையத்துக்கு நேரடியாக விடப்படும். புழலேரியிலிருந்து ஏற்கனவே கிடைத்துவரும் தண்ணீருடன் இக்கூடுதல் நீரும் வழங்கப்படும். அதாவது நாள்தோறும் 4 கோடி காலன் தண்ணீர் கூடுதலாக வழங்கப்படும்.

கூவம் மேம்பாட்டுத் திட்டம், இருகரைகளையும் சிமெண்டு பிளாக்குகளாக் கொண்டு உட்பக்கமாக வலுப்படுத்த வகை செய்கிறது.

கேப்பேயர் பாலம் அருகே கூவம் ஆற்றின் இடது கரையை வலுப்படுத்தும் வேலை பெரும்பாலும் முடிந்துவிட்டது; வலது கரையை வலுப்படுத்தும் வேலை தற்போது நடைபெறுகிறது.

மண்வாரி இயந்திரம் வாங்குவதற்காக நடவடிக்கை எடுக்குமாறு தலைமைப் பொறியர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

ஆற்றின் இரு மருங்கிலும் சுமார் 12 ஏக்கர் நிலம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது;: அது கடைகள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும்.

இரு கரைகளையும் அழகுபடுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பல பூங்காக்கள் நிறுவப்படும்; இயலுமானால் உல்லாசப் படகு விடுவது போன்றவைகளுக்கு வகை செய்யப்படும்.

மாநகராட்சியின் கழிவுநீர் குழாயிலிருந்தும், மத்திய சிறை, பொது மருத்துவமனை போன்றவைகளிலிருந்தும் வெளிவரும் சாக்கடை நீர் கூவம் ஆற்றில் விழாதவாறு தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்; மருத்துவமனையிலிருந்து வரும் கழிவு நீர் முக்கியக் குழாயில் திருப்பு வகை செய்யப்படும்.

கூவம் ஆற்றின் துர்நாற்றத்தைப் போக்கிச் சுத்தம் செய்யும் திட்டத்தை இரு ஆண்டுகளில் முடித்துவிட மாநகராட்சி ஒப்புக் கொண்டிருக்கிறது.

கூவம் ஆற்றின் கரையில் குடியேறியுள்ள குடிசைவாழ் மக்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள்; வீடுகளுக்காக ரூ. 35 இலட்சம் செலவில் குடியிருப்பு வசதித் திட்டமொன்றை மேற்கொள்ளுமாறு மாநில வீட்டு வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

"சர்க்கரைத் தொழிலில் மத்திய அரசு தலைவிடுவதைக் கைவிட்டால் நாடு 45-இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்து கிலோ 2 ரூபாய் விலையில் மக்களுக்கு வழங்கமுடியும்" என்றார்.

"சர்க்கரைக் கொள்கை விவசாயிகள் நலனுக்கோ, உபயோகிப்போர் நலனுக்கோ, தொழிலாளர் நலனுக்கோ, தொழில் நலனுக்கோ ஏற்றதாக இல்லை" என வாஜ்பாயி கூறினார்.

"கடந்த 35 ஆண்டுக்காலமாகச் சர்க்கரைத் தொழிலுக்கு அரசு பாதுகாப்பு அளித்துவந்தது; அதனால் தொழிலில் திறமையின்மையும், மெத்தனமும் ஏற்பட்டுவிட்டது"

என்று நாராயண ரெட்டி (சுயே) கூறினார்.

டாக்டர் தர்மம்பாள் மகளிர் இலக்கிய வகுப்பு

சென்னை நக்கீரர் கழகத்தின் சார்பில், டாக்டர் தர்மம்பாள் மகளிர் இலக்கிய வகுப்புத் தொடக்க விழா 8—12—68 மாலை 4 மணிக்கு தண்டையார்பேட்டை முருக தலுல்கோடி மகளிர் உயர் நிலைப்பள்ளியில் நடைபெறும்; பேராசிரியை பு. பா. இராசேசுவரி தலைமையில் திருமதி கே. சகுந்தலா தொடங்கிவைப்பார்; திருமதி நேயா அருணாசலம், செல்வி பிரிய தரிசினி ஆகியோர் சிறப்புரை யாற்றுவர்.

சென்னை 115வதுவட்ட கே.வி.கே. சாமி நினைவு மன்றம்

சென்னை 115-வது வட்டம் எம். ஜி. ஆர். நகர் வள்ளியம்மாள் தோட்டத்தில், வட்டச் செயலாளர் மு. நா. நெயசுந்தரன் முன்னிலையில் கே. வி. கே. சாமி நினைவு மன்ற நிர்வாகிகள் தேர்தல் கடைபெற்றபோது, ப. துரைசாமி தலைவராகவும், பி. கே. சிவலிங்கம் செயலாளராகவும், சிவ. சண்முகம் துணைச் செயலாளராகவும், எம். வீராயமூர்த்தி பொருளாளராகவும் மற்றும் 6-பேர் செயற்குழு உறுப்பினர்களாவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இடைப்பாடி கோவிந்தசாமி மன்றம்

25—11—68 அன்று இடைப்பாடி தாவாங்கெரு தோழர் என். அருணகிரி இல்லத்தில் கோவிந்தசாமி மன்றத்தில் அமைப்புக் கூட்டம், இடைப்பாடி நகர தி. மு. க. செயலாளர் சேட்டு டீ. முத்து தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட விவரம்:—

அவைத் தலைவர்: எம். தங்கவேல்; செயலாளர்: என். அருணகிரி; துணைச்செயலாளர்: கே. ரங்கசாமி; பொருளாளர்: என். மணிவண்ணன்; செயற்குழு உறுப்பினர்கள்: என். இராமர்; பி. சுப்பிரமணியன்; ஏ. மாரியப்பன், கே. இளங்கோ, எம். குழந்தை.

சென்னை 106-வது வட்டம் அஞ்சுகம் அறிவு வளர்ச்சி மன்றம்

23—11—68 அன்று 106-வது வட்டத்தில் 'அஞ்சுகம் அறிவு வளர்ச்சி மன்றம்' என்ற புதிய துணை மன்றம், வட்டப் பொறுப்பாளர் கீ. மு. கோவிந்தன் அவர்களை ஆண்யாளராகக்கொண்டு அமைக்கப்பட்டது.

அதுபோது த. சுந்தரம் அவைத் தலைவராகவும், க. குப்புசாமி செயலாளராகவும், ச. பாலகிருஷ்ணன் துணைச் செயலாளராகவும், கோ. இராசு பொருளாளராகவும், மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 109-வது வட்ட முத்தமிழ் வளர்ச்சி மன்றம்

சென்னை 109-வது வட்டக் கிளைக் கழகச் செயலாளர் ந. மு. வரமான் தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் விவரம் வருமாறு:—

தலைவர்: கே. எஸ். மணி; செயலாளர்: சோ. நடராசன்; துணைச் செயலாளர்: ந. ஏழுமலை; பொருளாளர்; வை. செல்வராசன்; மற்றும் 19 செயற்குழு உறுப்பினர் ஏகமனதாகத் தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

சென்னை 13-வது வட்டம் எம். ஜி. ஆர். மன்றம்

சென்னை 13-வது வட்டத்தில் உள்ள அப்பாராவ் தோட்டத்திலுள்ள எம். ஜி. ஆர். மன்றத்திற்கு 18—11—68 அன்று தோழர் நடனசிகாமணி அவர்கள் ஆண்யாளராகக்கொண்டு தேர்தல் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம்:—

தலைவர்: ஏ. கணேசன்; துணைத் தலைவர்: வி. அலிமுத்து; செயலாளர்: எம். முருகேசன்; துணைச் செயலாளர்: ஜி. பாலன்.

நம் நாடு

'தாய்மொழியைக் கைவிட்டுப் பிறமொழியைக் கற்கத் தேவையில்லை'

'ஒரு மொழியிலேயே காலத்தைச் செலவழித்துவிடக் கூடாது'

'ஆங்கிலத்தில் போதிய அறிவு பெறுவது அவசியம்'—அமைச்சர் இரா.நெடுஞ்செழியன் வலியுறுத்தல்

சென்னை, டிச. 5—

"ஆங்கிலத்துக்கும் — தாய்மொழியான தமிழுக்கும் பகையில்லை; ஒன்றைக் கைவிட்டுத்தான் மற்றொன்றைக் கற்கமுடியும் என்பதும் இல்லை!

"ஆங்கில அறிவு நமது எழுத்தாளர்களுக்குப் புதிய துறைகளைக் காட்டும்; சிந்தனையாளர்களின் சிந்தனையைத் தூண்டும்; தத்துவவாதிகளுக்கு ஆழந்த அறிவை அளிக்கும்."

இவ்வாறு கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் கல்லூரியில் பி.யு.சி. ஆசிரியர்களுக்கான நான்குவார ஆங்கிலப் பயிற்சி வகுப்பைத் துவக்கி வைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"ஆங்கில அறிவினால், நாம் பல பொருள்களைத் தேர்ந்து கொள்வதோடு, நாமும் பிறருக்கு நிறையக் கற்றுத் தரமுடியும்.

"தாய்மொழியின் முக்கியத்துவத்தைக் குறைக்காமல், கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்கள், ஆங்கிலத்தில் போதிய அளவு தேர்ச்சி பெறச் செய்யப்படுவது அவசியமாகும்.

"ஒரு மொழியைக் கற்பதிலேயே நமது காலமெல்லாம் போய்விடக் கூடாது; நேரத்தைச் சரிவர ஈவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

"நவீன முறைகளையும், உத்திகளையும், சாதனங்களையும் பயன்படுத்தி மாணவர்கள் சுலபமாகவும் குறுகிய காலத்திலும் ஒரு மொழியைக் கற்றுத் தேர்ச்சி பெறச் செய்ய வேண்டும்; கல்வித் துறையில் ஈடுபட்டுள்ளோரெல்லாம் முன்னுந்து ஆற்றவேண்டிய மகத்தான பணியாகும் இது."

கோழி வளர்ப்பில் அரசு வனம்

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி விளக்கம்

சென்னை, டிச. 7—

"அரசாங்கக் கோழிப் பண்ணைகளை இயல்பகரமான முறையில் நடத்துவதில், அரசு தீவிர வனம் செலுத்தி வருகிறது"

என்று வேளாண்மை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், கோடம்பாக்கத்தில் கோழிப் பண்ணை ஒன்றைத் துவக்கிவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"கோழி வளர்ப்புக்காக இது வரையில் அரசினர் செலவிட்ட பணத்திற்குத் தகுந்த பலன் கிடைக்கவில்லை.

"கோழி வளர்ப்புக்காக அரசிடம் பண உதவி பெற்றவர்களில் பலர், அந்தப் பணத்தை உரிய முறையில் செலவிட்ட வில்லை.

"குரோம்பேட்டையில் பர்மா அகதிகள் நல்ல முறையில் கோழிப் பண்ணை நடத்துகிறார்கள்; இந்தப் பண்ணையில் நல்ல இலாபம் கிடைக்கிறது."

கி. பி. இரண்டாயிரத்தில் மனிதனின் உணவு

நிபுணர்கள் கருத்து

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாவிடில், உலகில் இன்னும் பல ஆண்டுகளில் மனிதன் உண்ணப் போதுமான உணவின்றித் தவிக்க நேரிடும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

2000-ஆம் ஆண்டில் மனிதனின் நிலை என்ன?—இது குறித்து ஜேர்மன் விஞ்ஞானி ருடவர் ஆராய்ந்து கருத்துத் தெரிவித்திருக்கிறார்; இன்னும் 32 ஆண்டுகளில் மனிதன் பயன்படுத்தும் மூலப்பொருள்களின் அளவு மிகவும் அதிகரித்துவிடும்' என்று அவர் கூறியிருக்கிறார்.

தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு முன்னர் மனிதன், தன் வாழ்நாள் முழுவதிலும், ஏறத்தாழ ஒரு டன் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி இருப்பான்; இதில் பாதி தண்ணீர்; கால் பங்கு உணவு; மற்றப் பகுதி மரம், தோல், களிமண், கற்கள் ஆகியவையாகும்.

ஆனால் இப்போது அமெரிக்காவை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு மனிதனும் 8 டன் மூலப் பொருள்களைப் பயன்படுத்தி வருகிறான். 2000-ஆம் ஆண்டில் ஒவ்வொரு மனிதனும் 20 டன் மூலப் பொருள்களைப் பயன்படுத்துவான். இதில் பல்வேறு உலோகங்களும், இரசாயனக் கலவைகளும் அடங்கும்.

உலகின் மக்கள் தொகை குறிப்பிட்ட அளவில் கட்டுப்படுத்தப்படும் என்ற மதிப்பீட்டில் இவ்விதம் கணக்கிடப்பட்டிருக்கிறது. எனினும், 2000-ஆம் ஆண்டில் மனிதனுக்குப் போதுமான மூலப் பொருள்கள் தாராளமாகக்கிடைக்கக்கூடும்.

கிளைக் கழகப் பொறுப்பாளர்கள்

பேசின்பிரிட்ஜ் பகுதிச் செயலாளர் அறிவிப்பு

பேசின்பிரிட்ஜ் பகுதி 21-வது வட்டம் சர். இராதாகிருஷ்ணநகர் தி. மு. க. கிளையின் பொறுப்பாளராக எஸ். என். தீராவிடமணியும் 23-வது வட்டம் செரியன் நகர் தி. மு. க. கிளையின் பொறுப்பாளராக திராவிடனுமாய் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். கழகத் தோழர்கள் அவர்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றுமாறு பகுதிச் செயலாளர் ம. மோகனராங்கம் தெரிவித்துக் கொள்கின்றார்.

பிரிட்டனின் தங்க இருப்பு

இலண்டன், டிச. 7—

நவம்பர் 30-ஆம் நாள் எடுத்த கணக்கின்படி பிரிட்டனின் தங்கம் கையிருப்பு, 1,046 மிலியன் பவுன்களாக இருந்தது.

சென்ற மாதத்தைவிட இது 82 மிலியன் பவுன்கள் குறைவு என்றாலும், நவம்பரில் 54 மிலியன் பவுன்கள் கடன் தொகையைப் பிரிட்டன் திருப்பிச் செலுத்தியிருக்கிறது.

கோடி கோடியாக நாணயங்களை அடித்துக் குவிக்கும் தொழிற்கூடம்

உலகின் பல நாடுகளின் தேவைகளையும் நிறைவு செய்கிறது

பிரிட்டிஷ் தங்கசாலையின் அரும்பெருஞ் சாதனை

பிரிட்டிஷ் தங்கசாலை (நாணயச் சாலை) உலகிலேயே உள்ள மிகப் பெரிய தங்கசாலைகளில் ஒன்று. பிரிட்டனுக்கும், உலகம் முழுவதும் உள்ள பல நாடுகளுக்குமாக ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி நாணயங்களை இது தயாரிக்கிறது

ஆண்டுக்கு 100 கோடி நாணயங்கள் என்பது மிகக் குறைந்த அளவு; அதுவதிலட்ப மடங்கு அதிகமாகவும் சில ஆண்டுகளில் நாணயங்கள் இங்கு தயாராகியிருக்கின்றன.

எடுத்துக்காட்டாக, 1966-ஆம் ஆண்டில் நூற்றுக்கணக்கான மிலியன் நாணயங்கள் இங்கு தயாராகியிருக்கின்றன; 150 வகையான நாணயங்கள் அந்த ஆண்டு தயாராயின; இவை 40 நாடுகளின் புழக்கத்திற்கானவையாகும்.

ஆனால் சென்ற (1967) ஆண்டில் நாணயத் தயாரிப்பில் பிரிட்டன் ஓர் அரிய சாதனையே புரிந்திருக்கிறது. ஏற்றுமதிச் சாதனைக் காக அரசியாரின் விருது பெற்றுள்ள இந்த நாணயசாலை, சென்ற ஆண்டு ஏற்றுமதி செய்துள்ள நாணயங்கள் 925 மிலியன்; மொத்த உற்பத்தியில் இது 70 சதவிகிதமாகும்.

நூறு ஆண்டுகளுக்குமுன் 25 மிலியன் நாணயங்கள் மட்டுமே தயாரித்துவந்த இந்த நாணயசாலையில், இப்போது ஆண்டுக்கு 1,000 மிலியன் நாணயங்களுக்கு அதிக மாகத் தயாராகிறது.

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உட்பட்ட இந்த நாணயசாலை நிதி அமைச்சரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது. புதிய நாணய அமைப்புகள் குறித்து ஆலோசனை சொல்லும் குழுவுக்கு எடின்பரோ கோமகன் தலைவர்.

சுமார் 1000 நிபுணர்கள் பணியாற்றும் இந்த நாணயசாலையின் பிரதிநிதிகள் உலகின் பல நாடுகளிலும் உள்ளனர்.

ஆண்டுதோறும் நாணயத் தயாரிப்புக்காக 7,500 டன் உலோகம் இங்கு செலவாகிறது. பிளாட்டினம், தங்கம், வெள்ளி, நிக்கல், பித்தளை, செம்பு, துத்தநாகம் மற்றும் சில கலப்பு உலோகங்கள் இந்த வகையில் பயன்படுத்தப்படுகின்றன.

கடமைகளைச் சரிவரச் செய்பவர்களுக்கு:

கடமைகளைச் சரிவரச் செய்பவருக்கு உண்மைகள் தாகுவே வந்துவிடும்; உண்மையில், கடமையைச் செய்வதற்கான உரிமைக்காக மட்டும்தான் வாழ வேண்டும்; அதற்காக மட்டும் தான் உயிரிழக்க வேண்டும்; நியாயமான எல்லா உரிமைகளும் இதன் வரம்புக்குள் வந்து விடுகின்றன!

—காந்தியார்

கி.பி.இரண்டாயிரத்தில் எஞ்சினியர்கள் நிலை

200 நிபுணர்கள் கூடி ஆராய்வர்

பாரிஸ், டிச. 6—

'கி. பி. 2000-ஆம் ஆண்டிலே தேவைப்படும் எஞ்சினியர்களை (பொறியியல் வல்லுனர்கள்) தயார் செய்வது எப்படி?' என்பதுபற்றி பாரிஸ் நகரில் அடுத்த வாரம் தொடங்கும் உலக மாநாட்டில் ஆராயப்படும்.

பொறியியல் கல்வியின் அமைப்பிலும் முறையிலும் தற்சமயம் செய்யப் பெற்றுவரும் மாறுதல்கள்—தொழில் செய்யும் எஞ்சினியர்களுக்கு ஆயுள்காலம் வரையிலும் நடத்த வேண்டிய கல்வி போதனை — உயர்மட்டப் பொறியியல் கல்வியில் ஆய்வுக்கூடங்களுக்கும் கணக்கிடும் பொறிகளுக்கும் உரிய பங்கு—தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்களில் சேருவதற்குத் தேவையான தகுதிகள்—முதலியன நிகழ்ச்சி நிரலில் இடம் பெறும்.

சமுதாயத்தில் எஞ்சினியருக்கு இருக்கும் பணி மாறி வருவதை யடுத்து இந்தப் பிரச்சினைகள் விவாதிக்கப்படும்; அவர் சிறப்பு நிபுணராக மட்டும் இருந்துவரும் காலம் மலையேறிவிட்டது. அருமையை கல்வி, புதிய தொழில் நுட்பங்களை ஏற்றுப் பயன்படுத்திக்கொள்ளவகை செய்ய வேண்டும். அவர் தொழில் புரியும் காலம் முழுவதிலும் புதுப் புதுத் தொழில் நுட்பங்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்கும்.

இவ்வாறு காலத்திற்கு ஏற்ப புதிய தொழில் நுட்பங்களை எஞ்சினியர் ஏற்க முடியாமற்போனால், இன்று மின்பொறி இயல் நிபுணருக்கும், இரசாயனப் பொறியியல் நிபுணருக்கும் ஏற்பபட்டுள்ள இடர்பாடான நிலைமை அவருக்கும் ஏற்படும்.

மின்பொறி இயல் நிபுணர் படித்த காமம் டிரான்சிஸ்டர் (மின் அணுக் கருவி) வரத காலம்; இரசாயனப் பொறி இயல் நிபுணர் படித்த காலத்தில், 'ஸ்ளாஸ்டிக்' என்ற ஒரு பொருள் பல்கலைக் கழகப் பாடத் திட்டங்களிலே இடம் பெற்றிருக்கவில்லை!

60 நாடுகள் 200 நிபுணர்களை 'யுனெஸ்கோ'வின் ஆதரவில் டிசம்பர் 9-ம் நாள் தொடங்கும் இந்த மாநாட்டுக்கு அனுப்புவதாக அறிவித்துள்ளது.

இரங்கல்

குணியமுத்தூர் தோழர் சென்னகிருஷ்ணன் 23—11—68 அன்று தமது 65-வது வயதில் இயற்கை யெய்திஞர்; அவர் சுமமரியாதை இயக்கக் காலக்கொட்டு இறுதி நாள் வரை நமது இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்து வந்தவராவார். அவர்தம் பிரிவால் துயருறும் ஒரே மகன் செ. கனகராசு பி.ஏ. அவர்களுக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் குணியமுத்தூர் தி. மு. கழகச் சார்பில் ஆழந்த அனுதாபம், ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

மறைவு

கடந்த 25—11—68 மாலை 6-மணியளவில் விழுப்புரம் வட்ட தி. மு. க. பிரதிநிதியான களிஞ்சிக் குப்பம் நா. இராமலிங்கன் அவர்களின் தந்தை தொ. நாராயணசாமி இயற்கை யெய்திஞர்; அன்று மாலை நடந்த சவ அடக்கத்தின்போது கழகத் தோழர்கள் மாலை அணிவித்து இறுதி மரியாதை தெரிவித்தனர்.

'சட்டமன்றத்தின் தீர்மானம் கண்டிப்பாகப் பின்பற்றப்படும்'

'மேற்கொண்டுள்ள முடிவிலிருந்து மாறும் நிலைக்கு சிறிதும் இடமில்லை'

என். சி. சி.-யில் இந்தி ஆணைச் சொற்கள் --- தமிழகத்தின் உறுதி நிலையற்றி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை, டிச. 7—

"தேசிய மாணவர் படைக்கான (என். சி. சி.) இந்தி ஆணைச் சொற்கள் நீடிக்கும் என்று மத்திய அரசாங்கம் கூறிவிட்டதால், 'இந்தி ஆணைச் சொற்களுடன் தமிழ்நாட்டில் என்.சி.சி. பயிற்சி எதுவும் இராது' என்று தான் மேற்கொண்டுள்ள நிலையிலிருந்து தமிழ்நாடு அரசு மாறாது.

"கடந்த சனவரித் திங்களில் தமிழகச் சட்டமன்றம் நிறைவேற்றிய இரு மொழித் தீர்மானத்தை மாநில அரசு கண்டிப்பாகப் பின்பற்றும்; இந்தத் தீர்மானப்படி என். சி. சி.-யில் இந்தி ஆணைச் சொற்களைக் கைவிடுவது என்று முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையிலிருந்து மாறும் பேச்சே இல்லை"

என்று கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், நாடாளுமன்றத்தில் பாதுகாப்புத்துறை தனியமைச்சர் வெளியிட்ட அறிக்கை பற்றி கருத்துத் தெரிவிக்கையில் திட்டவட்டமாக அறிவித்தார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"தேசியப் படை பயிற்சி, கல்லூரி மாணவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி போன்ற மாற்று ஏற்பாடுகளைச் செய்வது பற்றி அரசு பரிசீலிக்கலாம்; பழைய சாவகலாசாலை பயிற்சி (யு.டி.சி.)-வை மீண்டும் துவக்கப்படுவது பற்றியும் யோசிக்கலாம்.

தமிழக அரசு ஆண்டுதோறும் என். சி. சி.-க்காக ரூ. 80 இலட்சம் செலவழிக்கிறது. மத்திய அரசு தன்னுடைய உதவியை நிறுத்திஇலுங்கூட இந்த திட்டங்களில் ஏதாவது ஒரு நிட்டத்துக்காக இந்தத் தொகையை நன்கு பயன்படுத்த முடியும்.

மத்திய அரசின் கொள்கையின் விவரவுகளை இங்குள்ள என்.சி.சி. அதிகாரிகளுடன் விவாதிக்கப் போகிறோம்.

அர்த்தமற்ற வாதம்!

மாணவர்களுக்கு என்.சி.சி. பயிற்சி இல்லாவிட்டால் பாதுகாப்புப் படைகளுக்கு, ஆட்களைத் தேர்ந்தெடுப்பதில் நம்முடைய மாணவர்கள் பாதிக்கப்படுவர் என்ற வாதம் அர்த்தமற்றது!

பாதுகாப்புப் படையில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் அனைவரும் என்.சி.சி. பயிற்சி பெற்றவர்கள் என்று சொல்லமுடியாது; தகுதி, அல்லது திறமை உள்ளவர்கள் எப்படியும் பாதுகாப்புப் படையில் இடம்பெறுவர்!

இந்தி அல்லது ஆங்கில ஆணைச் சொற்களை ஒரு மாநிலம் வைத்துக்கொள்ளலாம் என்று மத்திய அரசு கூறினால் அதைப் புரிந்து கொள்ள முடியும்; ஆனால், இந்தி ஆணைச் சொற்கள் மட்டுமே பயன்படுத்தப்படும் என்று சொல்வது நியாயமல்ல!"

சிகிச்சை செலவை அரசு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அறிதீவிரமாக இருப்பவர் அண்ணாதான்!

கள்ளுக்கடைகளைத் திறந்தால் அரசுக்குப்பலரோடிருபாய் வருமானம் வரும் என்றபோதிலும், வள்ளுவர் வகுத்த திட்டம்—புத்தர் போதித்த திட்டம்—நபிகள் வற்புறுத்திய திட்டம்—'நட்டம் வந்தாலும் பரவாயில்லை; வருமானம் வராதபோதிலும், மதுவிலக்கை அமுல்படுத்தியே தீர வேண்டும்' எனபதில் உறுதியாக நிற்கிறார்! இது, காந்தியார் எப்படிக் கொள்கையில் பிடிவாதமாக இருந்தாரோ -- அதைப்போல் அண்ணாவும் கொள்கைப் பிடிப்பாளராக இருப்பதை எடுத்துக் காட்டுகிறது!

காந்தியார் கனவை நனவாக்கித் தீருவோம்!

அண்ணல் கொள்கையைப் பின்பற்றி அரசோச்சும் அண்ணன் வழிநின்று காந்தியாரின் கனவை நனவாக்குவோம்!"

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், கூடுவாஞ்சேரியில் ரூ. 18 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட ஊராட்சிமன்றக் கட்டிடத்தையும் திறந்துவைத்தார்.

இராஜாஜி மண்டபத்தில் பரிசு வழங்கு விழா

தமிழக அரசின் இரண்டாவது பரிசுச் குலுக்கலில் பரிசு பெற்றவர்களுக்கு 9—12—68 காலை 10-மணிக்கு இராஜாஜி மண்டபத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் பரிசு வழங்குவார்.

குடும்ப நலத் திட்டம்

எஸ். ஜே. சாதிக்பாட்சா

வானொலி உரை

8—12—68 இரவு 9-15 மணிக்கு நலத் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்கள், வானொலியில் குடும்ப நலத் திட்டம் பற்றி ஆற்றும் உரை ஒலிபரப்பப் படும்.

அறிஞர் அண்ணா தலைமையில் புரட்சி நடிகரின் இல்லத்துத் திருமணம்

அமைச்சர்கள் -- கலையுலகினர் வாழ்த்து வழங்கினர்

சென்னை, டிச. 6—

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் அண்ணன் எம். ஜி. சக்கரபாணியின் மகள் செல்வி: விஜயலட்சுமிக்கும்—கோரளாவைச் சேர்ந்த பி. கே. நாயரின் மகன் செல்வன்: வேணுகோபாலுக்கும் திருமணம் தியாகராயநகர் அபிபுல்லா ரோடிலுள்ள ஜி. எஸ். திருமண மண்டபத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மணமக்களை வாழ்த்தி அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, சே. மாதவன், மா. முத்துசாமி, மற்றும் சென்னையின் புதிய டெபுடி சுங்தாலால் நகாதா ஆகியோர் பேசினர்.

கலைஞர்கள் -- திரைப்படட அதிபர்கள் -- அரசியல் கட்சித் தலைவர்கள் -- குழந்தை தலைவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், அனைவருக்கும் நன்றி கூறினார்.

புதுவையில்

கூட்டணியின் மாபெரும் பொதுக்கூட்டம்

★

புதுவை கூட்டணியின் சார்பில்

8-12-68 மாலை 6-மணிக்கு காந்தி திடலில்

தலைவர்: **குபேர்**

பேசுவோர்:

என். வி. நடராசன்
எம்.எல்.சி.

சி. பி. சிற்றரசு
எம்.எல்.சி.

மற்றும் கூட்டணியைச் சேர்ந்த பிரதிநிதிகள்

புதுவையில் ஊழியர் கூட்டம்

"8—12—68 பிற்பகல் 3-மணியளவில், புதுவை அம்பலத்து அடியார் மடத்து வீதியில், கூட்டணியைச் சேர்ந்த ஊழியர்கள் கூட்டம் நடைபெறும்; கழக அமைப்புச் செயலாளர் என்.வி.நடராசன் எம்.எல்.சி., வெளியீட்டுச் செயலாளர் சி. பி. சிற்றரசு எம்.எல்.சி. ஆகியோர் கலந்துகொள்வர்.

"கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த ஊழியர்கள் அன்வரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்"

என்று புதுவை நகர தி.மு.க. செயலாளர் கே. முருகய்யன் அறிவிக்கிறார்.

நடக்க இருப்பவை

8--12--68

நெல்லை

18-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு பாட்டுப் பத்து எம். ஜி. ஆர். திடலில்; தலைவர்; எஸ். சித்திர புத்திரன்; பேசுவோர்: கேரள சுங்தரம், ஏ.எல்.சுப்பிரமணியம்மம்.எல்.ஏ. பி. பத்மநாபன், இ. நம்பி, ஆ. இசக்கி.

சென்னை மாவட்ட தி. மா. மு. க. அமைப்புத் தேர்தல்

தி. மா. மு. க. பொதுச்செயலாளர் எஸ். டி. சோமசுந்தரத்தின் அறிக்கைக் கொப்பு, சென்னை மாவட்ட தி. மா. மு. க. அமைப்புத் தேர்தல் சம்பந்தமாகவும், உறுப்பினர் புதுப்பித்தல் சம்பந்தமாகவும் கீழுக்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன் :—

என். வி. என். சோமு
மி.ச.பி.எல்., எம்.பி.,
சென்னை மாவட்ட நி. மா. மு. க. அமைப்பாளர்

'ஆஜாத் காஷ்மீரி'ல் சர்க்கரைக்குப் பதில் உப்பு!

பாகிஸ்தான் வசமுள்ள 'ஆஜாத் காஷ்மீர்' முஃபாபாராபாத் திலும், மற்றும் இதர பகுதிகளிலும் உள்ள மக்கள், தேநீருக்கு உப்புப் போட்டு அருந்துகிறார்களாம்!

கடந்த சில வாரங்களாக மார்க்கெட்டில் சர்க்கரையே கிடைக்காததன் காரணமாக அவர்கள் அவவாறு தேநீர் அருந்துவதாக 'டான' பத்திரிகை கூறியிருக்கிறது.

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிசிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள் :—

	ரூ. காசு
நேற்றைய இதழ்த் தொடர்ச்சி	14,716.00
வேலூர் ஜி. விசுவநாதன் எம்.பி.	500.00
திரு. இலட்சுமணன்	101.00
காரைக்குடி. திரு. சா. கணேசன் எம்.எல்.சி.	101 00
திருவொற்றியூர் டி. எஸ். கோபால்	501.00
சென்னை--இராயப்பேட்டை முத்தமிழ் முன்னேற்ற மன்றம் திருமதி எம். சகுந்தலா	10.00
சென்னை--இராயப்பேட்டை எம். இராமானுசம்	25.00
புத்தனேரி ரா. சுப்பிரமணியம்	25.00
திருப்பூர் நாஷனல் ஹாசரிஸ்	26.00
வல்லம் டி. கே. எஸ். பாலசுப்பிரமணியம்	11.00
நாகர்கோவில் ஏ. எஸ். தங்கவேலு	100.00
திருவரங்கம் டி. துரைசாமி	50.00
ஒரு டாக்டர்	21.00
சென்னை நண்பர்கள் கழகம்—அமைப்பாளர் இரா. வச்சிரவேலு மூலம்	101.00
பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களின் தனி உதவியாளர்கள்	101.00
மதுரை அசோக் மெட்டல் கம்பெனி பி. இராசசேகரன், எஸ். இராசாமணி	51.00
மதுரை-1 பி. சுங்தரம்	50.00
கவிஞர் பொன்னிவளவன், சென்னை	25.00
சென்னை—1 எல். ஓன். முருகேசன்	25.00
சென்னை—1 யு. இ. ஐ. எஸ். ஊழியர்கள்	32.00
அபிவிருத்தீசுரம் மி. துரைசிங்கம்	25.00
மதுரை—10 அ. தி. கோ, மனோகரன்	51.00
சுங்தராபுரம் இரா. கந்தசாமி	100.00
காஞ்சிபுரம் வி. என். மார்க்	20.00
விராலிமலை தமம. இராசலிங்கம்	10.00
துறையூர் டி. கே. கணேசன்	10.00
கலவை தி. மு. க. செயலாளர் பா. சீராமுலு	21.00
சேலம் அன்னதானப்பட்டி மு. சுங்தரம்	10.00
கிணத்துக்கடவு என். சொக்கலிங்கம்	10.00
திருமங்கலக்கோட்டை கே. வி. நடேசநாயினார்	10.00
மன்னார்குடி ஜி. சுப்பிரமணியம்	10.00
பல்லடம் பி. ஏ. சுப்பிரமணியம்	10 00
கோவை ஆர். வி. முத்தலிப்	25.00
தருமபுரி—பாரஞர் சண்முக துரைசாமி	5.00
செய்யாறு ஆர். தனபால்	9.99
ஆற்காடு கே. எம். துரைசாமி	9.00
சென்னை—புரசை என். சரோஜா	5.00
சென்னை—5 எம். வி. சணமுகம்	5.00
சென்னை—17 கீழ்வேளூர் மீனாட்சிசுங்தரம் பிள்ளை	5.00
சேலம்—1 எஸ். முத்துபழனி	5.00
பட்டுக்கோட்டை எம். ஜி. நாராயணசாமி	5.00
,, ,, ஜி. காசிநாதன்	5.00
மன்னார்குடி எல். செகப்பிரியன்	5.00
நாகை ஏ. எஸ். முத்துகுமாரசாமி	5.00
தஞ்சை—1 சு. வீரையா	5,55
டி. புதுப்பட்டி மா. பாலு	5.00
பழனி டி. கே. எம். யூசப்	5.00
குமாரகுப்பம் ஏ. கிருஷ்ணமூர்த்தி	5.00
அரியாக்குறிச்சைபுதூர் இரா. காளியண்ணன்	5.00
கோவை—11 வி. பி. குமாரவேலு	5.00
சென்னை—5 கு. ச. இராமன்	10.00
ரூ. 2 வீதம் அனுப்பிவைத்தோர்	
மாயூரம் க. பாண்டியன், குளித்திகிராமம் டி. இ. பொன்னுரங்கம், கங்கனாஞ்சேரி மு. கோவிந்தசாமி, திருவாரூர் கூ. சுப்பிரமணியம், தஞ்சை-1 கே. பவாளி, அரியலூர் ஜே. அபுதுல்ஹை, பாளையம்பட்டி திருமதி இந்திரா தேவி ஆகிய 7-பேர்	14.00
மேட்டுப்பாளையம் தியாகராசன், சென்னை-14 ச. கிருஷ்ணன்	2.00
நெய்வேலி-8 சு. பெ. குப்புசாமி	4.00
காரைக்கால் திருமதி மு. சங்திரோதயம்	3.00
கடையநல்லூர் கோ. சசிதரன்	3.00
சென்னை நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் ரோடு, ரட்டன் பசார் சிறு அங்காடிகள் முன்னேற்ற மன்றச் சார்பாக—மன்றத் தலைவர் மு. வேதாசலம் எம்.எல்.ஏ. அவர்கள் மூலம்	250.00
ஆக மொத்தம்	17,264.54

நிதி அனுப்ப வேண்டிய முகவரி :—

மு. கருணாநிதி, பொருளாளர்,
தி.மு.க. தலைமை நிலையம், இராயபுரம், சென்னை-13

இராவிட முன்னேற்றக் கழகத்தொகுதிகளை, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.அவர்கள் ஆதிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, ஞாயிறநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.